2023

முத்தரசி

கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

# தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள்

**முனைவர். ச.கனகவள்ளி**

உதவிப் பேராசிரியர், தழிழ்த்துறை,

அரசு மகளிர் கலைக்கல்லூரி,இராமநாதபுரம்.

**முன்னுரை:**

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வில் சடங்குகளும், தெய்வ வழிபாடுகளும் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. வழிபாடானது இயற்கை வழிபாடு, கடவுள் வழிபாடு, மர வழிபாடு, நடுகல் வழிபாடு, கொற்றவை வழிபாடு, வெறியாட்டு எனப் பல வகைப்படும். இவ்வழிபாடு பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**இறைவழிபாட்டின் தோற்றம்:**

மனிதன் மனதில் தோன்றிய அச்சம், குற்றவுணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாட்டு நெறிக்கு வித்திட்டது[1] என்று சிக்மண்ட் பிராய்டு குறிப்பிடுகின்றார். இதன்படி தொடக்க காலத்தில் மனிதன் தன் தேவையைப் பூர்த்தி செய்ய இயற்கையுடன் போராடுவதில் ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சியும்தான் நாகரிக சமூகத்தின் அளவுகோலாக உள்ளது. வேட்டையாடி உணவு உண்ட மனிதன் இயற்கையிடம் இயல்பாகவே பயம் கொண்டிருந்தான் பயத்தை உண்டாக்கும் இயற்கையையே இறைவனாக்கினான். பயத்தின் விளைவாகவே கடவுள் என்று கட்டமைத்துக்கொண்டான். ஆதி மனிதன் இயற்கை சக்திகளான நிலம், நீர், காற்று, வான், நெருப்பு முதலியவற்றைத்தான் தெய்வங்களாக வணங்கினான்.

**இயற்கை வழிபாடு:**

இயற்கையையும், மனித வாழ்வையும் பிரிக்க முடியாத ஒன்று என்பது சங்க இலக்கியக் கொள்கை உலகம் ஐந்து பெரும் பொருளால் கூடி உருவானதென்பதை மக்கள் நன்கு அறிந்திருந்தனர்.

“ நிலம், தீ, நீர், வளி விசும்போடைந்தும்
கலந்த மயக்கம் உலகம்…..”

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

“ ஐம்பெரும் பூதத்து இயற்கை போல…..”

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

வான் தெய்வமாகக் கதிரவன் என்னும் வெய்யோன் போற்றப்படுகின்றான். ஞாயிறு அம்சத்தை தம்முள் கொண்டவனாகக் கருதப்படுகின்ற பல தெய்வ உருவங்களும் கோட்பாடுகளும் பின்னர் தோன்றின. திருமால் சூரிய நாராயணனாகவும், சிவன் மார்தாண்ட பைரவராகவும் (மார்தாண்டம் என்றால் சூரியன்) போற்றப்படுகின்றார்கள்.

“நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்பொடு ஐந்தும் உடன் இயற்றிய
மழுவான் நெடியோன் தலைவன் ஆக”



SAMPLE

(453 - 454)

என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது. சங்க கால மக்கள் இயற்கை வழிபாட்டினையும் போற்றியுள்ளனர் என்பதை இக்குறிப்பு சுட்டுகின்றது.

**கடவுள் வழிபாடு:**

கொடி நிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் கடவுள் நிலைகளாகத் தொல்காப்பியரால் சுட்டப்படுகின்றன.

" கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

(தொ.பொருள் : 1034)

மூன்றும் வழிபடத் தகுந்தன. மரத்தின் அடிப்பாகத்தில் கடவுள் சேர்ந்து உறைந்ததாக நம்பப்பட்டதை காட்டுகின்றன.

**சிவனும் மரவழிபாடும்:**

சிவனே ஆலமர் கடவுளாக கருதப்படுகின்றார்.

" ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல் போல"

(கலி : 81)

என்று இவரைக் கலித்தொகை போற்றுகின்றது.

"ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்"

(புறம் 198)

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

ஆலமரத்தின் கீழ் அமர்ந்து வேதங்களை உபதேசிக்கின்றவராக இவர் சிற்பங்களில் காட்டப்படுகின்றார். இவற்றில் இருந்து தமிழரின் மரவழிபாட்டு விளக்கம் கிடைக்கின்றது. மரத்தடியிலும் மலர்ச்சோலைகளிலும் தெய்வங்கள் வீற்றிருப்பதாகக் கருதப்படுவதனால் வனங்கள் காக்கப்பட்டன. நந்தவனங்கள் பெருக்கம் பெற்றன. புனிதமான தல விருச்சக் கோட்பாடுகளும் தோன்றின. தமிழர்கள் தொன்றுதொட்டு அரசமரம், ஆலமரம், வேப்பமரம், கடம்ப மரம், வாகை மரம், கொன்றை மரம் ஆகிய மரங்களையும் மரத்தின் இலைகளையும் புனிதமாகப் போற்றி வணங்கி வருகின்றனர்.

சிவனை வழிபடுபவர்கள் துவராடை உடுத்தி முக்கோலினைக் கொண்டிருந்தனர் என்பதை முல்லைப்பாட்டு

" கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப"

(முல்லை 36 -37)

என்று குறிப்பிடுகின்றது.

சிவபெருமானுக்கு வேள்வித்தீ வழிபாடு இன்றியமையாதது என்பதையும் அதனைச் செய்தவர்கள் அவிர்சடை முனிவர்கள் என்பதையும் எட்டுத்தொகை நூல் குறிப்பிடுகின்றன.

"கடுந்தெறற் செந்தீ வேட்டுப்

SAMPLE

புறந்தாழ் புரிசடை புலர்த்துவோனே'' (புறம் : 251)

**திருமால் வழிபாடு:**

தமிழ்நாட்டின் தொன்மையான வழிபாடுகளுள் திருமால் வழிபாடு இன்றைக்கு 2500 ஆண்டுக்கு முற்பட்டது என்று உறுதி செய்யப்பட்ட தொல்காப்பிய பொருளதிகாரத்தின் முதல் நூற்பாவின் முதல் தொடரே ''மாயோன் மேய காடுறை உலகமும்'' என்று அமைகிறது. முல்லை நிலத்தின் இறைவனாக திருமால் போற்றபட்டது தெளிவாகிறது. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களில் 'காத்தல்' என்ற தொழிலை மேற்கொண்ட அருளாளனாக முன்னோர் திருமாலை முன் நிறுத்தினர். சங்க இலக்கியங்கள் மாயோனை 'மால்' என்றும் அவன் விண்ணுயர் புட்கொடியை ஏந்தியவன் என்றும் நீல வடிவினன் என்றும் சக்கரப் படையை ஏந்தியவன் என்றும் பல குறிப்புகளை தருகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலிலும், தமிழின் முதல் நாடக இலக்கியமாகிய இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திலும் திருமால் வழிபாடு குறித்த உயரிய பதிவுகள் நிறைவாக அமைந்துள்ளன. கோவலன் கொலையுண்ட போது தீய நிமித்தங்கள் தோன்றிகின்றன. தீயவற்றிலிருந்து மக்களை காப்பாற்றுவது கண்ணனை வழிபடுவதால் நடைபெறுகின்றது என்று ஆயர்குல மக்கள் ஆடல் பாடல் வழியாக வழிபடுகின்றனர்.

**முருகன் வழிபாடும் வெறியாட்டும்:**

சங்க இலக்கியங்கள் சுட்டும் முருக வழிபாட்டின் பெரும்பகுதி வெறியாடல் நிகழ்ச்சியாகவே அமைந்துள்ளது. தலைவியின் களவுக் காதல் பலரால் அறியப்பட்டு அலர் உண்டாயினும் காமத்தால் தலைவியின் உடலில் வேறுபாடுகள் தோன்றினாலும் இது முருகனால் வந்தது என்று கட்டுவிச்சி மூலமும், வேலன் மூலமும் குறிபார்த்து அறிந்து வெறியாட்டை மேற்கொள்வர். வெறியாட்டில் ஆலய பூசாரியே வேலன் என்பவராக உள்ளார் அவர் முருகனின் வேலினைக் கையில் கொண்டிருப்பார். குறவப் பெண்கள் நடத்தும் வெறியாட்டு பற்றி விரிவாக முருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது. இரண்டு வண்ண உடைகளை ஒன்றன் மீது ஒன்றாக அணிந்து கொள்கிறார்கள். கை மணிக்கட்டில் காப்பு எனப்படும் சிவப்பு நூலினை கட்டிக்கொள்கிறார்கள். ஆடுகளை வெட்டி இரத்தத்தை புதிதாக சமைத்த அரிசியில் உணவுடன் கலந்து அதை பலி என்னும் பெயரில் படைப்பார்கள். மணமுள்ள பூக்களால் ஆன மாலையை அனைத்து இடங்களிலும் தொங்கவிடுவார்கள். அந்த மலைப்பகுதியில் உள்ளவர்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். பசி பட்டினி இல்லாமல் எந்த விதமான நோய்களும் இல்லாமல் இருக்க வேண்டும். நல்ல மழை பெய்யவேண்டும் நிலவளம் செழுமையாக இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்வார்கள். பெண்கள் கைகளை பிடித்துக்கொண்டு நடனம் ஆடுவர். இவ்வாறு முருகனை மலைவாழ் மக்கள் வணங்கிய விதத்தை காட்டுகிறது.

முருகனுடைய பூசாரியான வேலன் முருகனின் ஆயுதமான வேலைத் தாங்கி ஆடுதலால் அவன் வேலன் எனப்பெறுகிறான். முருகன் அவன்மேல் ஆவேசித்ததாகக் கருதப்படுகிறது. அருள்பிரசாதமாக முருகனுக்கு படைக்கப்பட்ட பூக்களை தருகிறார்கள்.

SAMPLE

வேலன் நடத்தும் இம்மருளாடல் வெறியயர்தல், வெறியாட்டு, வெறியாடல் எனச் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

**நடுகல் வழிபாடு:**

பண்டைத் தமிழர் போரில் இறந்த வீரனுக்கு அவன் வீரத்தை நினைவு கூறும் வகையில் நடுகல் நட்டு வழிபட்டனர். தொடக்கக் காலத்தில் வெறும் கல்லை மட்டும் நட்டு வணங்கிய மக்கள் பின்னர் வீரனின் உருவத்தையும் அக்கல்லில் செதுக்கினர் பெருங்கற்படைச் சின்னங்கள் எழுப்பப்படும்பொழுது கடைப்பிடிக்கப்பட்ட சடங்கினைத் தொல்காப்பியம்

“ காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல்”

(தொல். பொருள்: 1006)

என வரிசைப்படுத்துகிறது. இறந்தவரை அவரது சுற்றத்தார் கண்டு வணங்குதல் பொருட்டுக் காட்சிப் படுத்துவதைக் ‘காட்சி’ என்றும் இறந்தோரை ஓர் இடத்தில் வைத்துப் பஞ்ச பூதங்களும் அவற்றை எடுத்துக்கொள்ள அழைப்பதைக் ‘கால்கோள்’ என்றும் எஞ்சிய எலும்புகளை எடுத்துவந்து தூய்மைப்படுத்துவதை நீர்ப்படை என்றும் பின் நீத்தோருக்காக எழுப்பப்படும் நினைவுச் சின்னத்தை “நடுகல்” என்றும் நினைவுச் சின்னத்தில் இறந்தவருக்காக வைக்கப்படுகின்ற பொருட்களைப் ‘பெரும்படை’ என்றும் பின்னர் இறந்தவரை பற்றிய அவரது நற்செயல்களை ‘வாழ்த்துதல்’ என்றும் பெரும்படை சின்னம் உருவான விதத்தையும் கடைப்பிடிக்கப்பட்ட பல்வேறு சடங்குகளை பற்றியும் தொல்காப்பியம் தெளிவுற எடுத்து இயம்புகிறது.

**பத்தினி வழிபாடு:**

சேர அரசனாகிய செங்குட்டுவன் இமயமலையில் கல்லெடுத்துவந்து நீர்ப்படை செய்து அக்கல்லிலேயே கண்ணகிக்கு படிமம் செய்து வழிபட்ட செய்தி கால்கோள், நீர்ப்படை, நடுகல் ஆகிய மூன்றிலும் இடம்பெற்றுள்ளன. கண்ணகிக்குச் செங்குட்டுவன் கயவாகு உள்ளிட்ட மன்னர்கள் செய்த வழிபாடு பற்றி வஞ்சி காண்டத்தில் இடம்பெற்றுள்ளது. மக்கள் தங்கள் உள்ள கஷ்டத்தை வழிபாடுகள் மூலமாக தெய்வத்திடம் எடுத்துரைக்கின்றனர். இதன் மூலமாக தங்களது துன்பங்கள் குறைவதாக எண்ணிக்கொள்கின்றனர். மக்களிடம் கூட்டு உணர்வு ஏற்பட்ட பின் அச்சத்தை போக்கிக் கொள்ளவும் வழிபாடு வழிவகை செய்கிறது. இறந்தவர்களின் நினைவை போற்றுவதால் அவர்கள் தங்களை காத்தருள்வார்கள் என்ற நம்பிக்கையை அறிய முடிகிறது.

**கொற்றவை வழிபாடு:**

மறவர்கள் தம் வெற்றிக்கு துணை செய்த பெண் தெய்வமான கொற்றவையை வாழ்த்தி வழிபட்டது **“கொற்றவை நிலை”** என்று பெயரிடப்பட்டது.

“ மறம் கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையின் அகத்திணைப் புறனே”

(தொல்.பொருள்: 1006)

2023

முத்தரசி

கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

இதன்மூலம் பண்டைத் தமிழர்கள் கொற்றவை என்ற பெண் தெய்வத்தை வணங்கி வாழ்த்தி விழா எடுத்தனர் என்ற செய்தி கிடைக்கின்றது. இலக்கியம் காட்டிய பெண் தெய்வம் கொற்றவை மட்டுமே. ஆனால் இன்றளவில் மனித இனம் எவ்வாறு பெறுகுகின்றதோ அதுபோலவே பெண்தெய்வங்கள் ‘அம்மன்’ என்ற பெயர் மாற்றத்தால் பல நிலைகளில் உருவம் பெற்றுள்ளன. தொடக்கத்தில் மழையாகிய மாரியை வழிபட்டனர். இன்று மாரியம்மன் என்று பெண் தெய்வ பெயர்கூறி வழிபடுகின்றனர்.

**வழிபாட்டின் இன்றைய நிலை:**

மக்கள் நாள்தோறும் படிக்கின்ற பழக்கம் உள்ளவர்களாக இருப்பதால் இதழ்களின் வாயிலாக ஆன்மீக கருத்துக்கள் பரப்பப்பட்டு பிரதிபளிக்கின்றன. அவற்றை கண்டு மக்கள் பயனடைகின்றனர். வருங்காலங்களில் போலிச்சாமியார்கள், இறைவனின் பெயரைச்சொல்லி ஏமாற்றுபவர்கள், பிள்ளைகளை பழியிட நினைப்பவர்கள் இவர்களை எல்லாம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். இவற்றிற்கு முறையான ஆன்மீக எழுத்தாளர்கள் உருவாக வேண்டும் அவர்களால் தான் மக்களை நல்வழி படுத்த முடியும்.

**நிறைவுரை:**

தமிழர் வணங்கிய வழிபாட்டு முறை தமிழ் இலக்கியங்களில் எந்தெந்த நிலைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை கண்டறிந்தும் இவை காலப்போக்கில் எத்தகைய மாறுதல்களுக்கு உள்ளாக வேண்டும் என்பதையும் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**துணை நூல்கள்:**

1. சு. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ப. 248 – 249
2. கா. ராசூன், தொல்லியல் நோக்கில் சங்க காலம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை.
3. ச.வே. சுப்பிமணியம், தொல்காப்பியம், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
4. க. ப. அறவானன், மரவழிபாடு திராவிட ஆப்பிரிக்க ஓப்பீடு. தமிழியல் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை.
5. ஆ. இராமகிருட்டிணன் - தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்.
சர்வோதய இலக்கியப் பண்ணைஇ
32/1 மேலமாசி வீதி, மதுரை.

SAMPLE